# 29 உரத்துப் படித்தலையும் ஓதுதலையும் பழகுதல்

**இலக்கு**

*உரத்துப் படித்தலையும் (பெரும்பாலும் நினைவில்வைத்து) ஓதுதலையும் பழகுதல் என்பது ஆக்கத் திறனுடன் உரைத்தலைப் போல (#25), வாய்வழி வெளிப்பாட்டை ஊக்கமூட்டுகிறது. கூடுதலாக, அது சொற்களஞ்சிய விரிவாக்கம், விரிவாக்கப்பட்ட தொடரியல் ஆக்கங்கள் மற்றும் இலக்கியப் பண்புகள் ஆகியனவற்றை ஊக்குவிக்கின்றது.*

தரம் 2-9

10-20 மணித்துளிகள்

**கருவிகள:**
அகவைக்கும் நேரத்துக்கும் பொருத்தமான எழுத்துருக்கள்

**குறிப்புகள்:**

- இம் முன்மொழிவு பா.மொ.க வுக்கு மிகப் பொருத்தமானது, ஏனெனில் வயது, திறமை அடிப்படையிலான வேறுபட்ட குழுக்கள் அவர்களின் தரப் பொருத்தமான எழுத்துருக்களை பயிற்சி செய்யலாம். இந்த வகையில் எல்லா குழுக்களும் ஒரே இலக்கினை ஆனால் வெவ்வேறு தரங்களை நோக்கியே செயற்படுகின்றன.
- உரத்துப் படித்தலுக்கு "முதல்மொழியில் படித்தலை ஊக்குவித்தல்" என்னும் தொகுதியில் குறிப்பிடப்பட்ட மதியுரைகளுக்குமிடையே நெருக்கமான தொடர்புகள் உள்ளன. குறிப்பாக #1, #10 இனைப் பார்க்கவும்.

---

**நடைமுறை:**

- ஆசிரியர் இலக்குப் பற்றி மாணவர்களுக்கு தெரிவிக்கிறார்: உரத்துப் படித்தல் அல்லது ஒரு செய்யுளை வெளிப்பாடுடையதாக ஓதுதல். முடிவில், எல்லா மாணவர்களும் தம்முடைய எழுத்துருக்களை விழா ஒன்றின் பகுதியாக, முடியுமாயின் ஒலிப்பதிவில், எடுத்துரைப்பர்.
- "வெளிப்பாடுடையதாக உரத்துப் படித்தல" என்பதன் உண்மையான கருத்து என்ன? #22இன் அணுகுமுறையுடன் இது நெருக்கமாகத் தொடர்புடையது (நல்ல / கூடாத எடுத்துக்காட்டு, நுண்ணறிவை அடிப்படையாகக் கொண்டு வழிகாட்டு விதிகளை வடிவமைத்தல்). #22இல் எடுத்துரைக்கப்பட்ட "உரைத்தல் - முன்னூட்டற் குறிப்புகள்" என்பவற்றை உரத்துப் படித்தல் ஓதுதலுக்கான முன்னூட்டற் குறிப்புகளென எளிதாக மாற்றியமைக்கலாம் (அடுத்த பக்கத்திலுள்ள பட்டியலைப் பார்க்கவும்).
- ஆசிரியர் பொருத்தமான, சிறு எழுத்துருக்களை பகிர்கிறார். (பயிற்சி வேறுபட்ட குழு நிலைகளை உள்ளடக்குமாயின், அவை செயற்பட ஒவ்வொன்றும் குறைந்தது ஒரு எழுத்துருவைப் பெற்றிருக்க வேண்டும். ஒவ்வொரு மாணவ இணையருக்கும் ஒவ்வொரு எழுத்துரு வழங்கமுடியுமாயின், ஒருவர்க்கொருவர் உரத்துப் படிப்பதைக் கவர்ச்சி உள்ளதாக ஆக்கும்.
- மாணவர் அமைதியாக தனித்தனியாக எழுத்துருவைப் படிப்பர். அவர்கள் தெளிவற்ற சொற்களையும் தொடர்களையும், அத்துடன் ஒலிப்பதற்குக் கடினமான சொற்களையும் அடையாளப்படுத்துவர். இதைத் தொடர்ந்து உறுதியற்றவைகள் மற்றும் எழுத்தாளர் அல்லது கவிஞர் பற்றி கலந்துரையாடப்படும்.
- மாணவர்கள் உரத்துப் படித்தலுக்கு மூன்று வழிகாட்டு விதிகளைத் தேர்ந்தெடுக்கிறார்கள். அவற்றுக்கு அவர்கள் அதிக கண்காணிப்பினைச் செலுத்துவர்.
- மாணவர்கள் தொடர்ந்து மூன்று கிழமைநாள்கள் எழுத்துருவை உரத்துப் படிப்பார்கள்.
- அவர்கள் இணையர்களாகவும் சிறு குழுக்களாகவும் பயிற்சி செய்து ஒருவர்க்கொருவர் பின்னூட்டல் செய்வர். (வினாக்கள்: "உரத்துப் படிப்பதில் என்ன நன்றாக இருந்தது?", "எதனை இன்னும் முன்னேற்றலாம்?")
- நிறைவாக, மாணவர்கள் தங்கள் எழுத்துருக்களை முழு வகுப்புக்கு அல்லது ஒரு நிகழ்ச்சியில், பெற்றோர் மாலை அல்லது விழாவில் உரத்துப் படிப்பர் அல்லது ஓதுவார். இதனை ஓர் ஒலிப்பதிவு (இறுவட்டு, MP3) ஆக்கலாம்.

**மாற்றுவழி:**

- மாணவர்கள் வீட்டிலுள்ள கருவிகளிலிருந்து அல்லது ஆசிரியர் வழங்கிய நூல்கள் மற்றும் எழுத்துருக்களிலிருந்து தங்களுக்குரிய எழுத்துருவைத் தேர்ந்தெடுப்பர்.
- தாமே பயிற்சிகளை மேற்கொண்டிருக்கும்போது மாணவர்கள் தங்கள் படித்தல்களையும் ஓதுதல்களையும் பதிவு செய்யலாம். தம்முடைய பதிவுகளைக் கேட்கும்போது அவை அவர்களுடைய ஒலிப்பையும் மற்றும் படிப்பின் ஓட்டத்தையும் மதிப்பிட்டு செம்மைப்படுத்த துணைசெய்கின்றன.



---

## உரத்துப் படிப்பதற்கும் ஓதுதற்குமான குறிப்புகள்

- எல்லோரும் உங்களை விளங்கிக்கொள்வதற்கு உரத்தும் தெளிவாகவும் பேசுக.
- விரைவாகப் படிக்க வேண்டாம், ஆனால் மிக மெதுவாகவும் அல்ல. இடைநிறுத்தங்களை மேற்கொள்க.
- நிறுத்தற் குறியீடுகளை மனதிற் கொண்டு, அதன்படி வாக்கியங்களை அழுத்திக் கூறுக.
- உங்கள் குரலை சந்தர்பத்திற்கேற்ப பயன்படுத்துக, உரத்து மற்றும் மெதுவாக, அச்சுறுத்துவதாக, நட்பாக, துயரமாக, மகிழ்வாக…
- முகபாவங்களையும், சைகைகளையும் சேர்த்துக்கொள்க: சினப் பார்வை, மகிழ்ச்சியான முகமாக ஆக்குதல், செயற்பாட்டுக்கு ஏற்றபடி உடலை அசைத்தல்.
- நூலுக்குப் பின்னால் முகத்தை மறைக்க வேண்டாம். எப்பொழுதும் உங்கள் அவையோருடன் கண்தொடர்பு வைத்துக்கொள்ளவும்.